பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

28 06 2024 **FRIDAY** 6 45 **AM**

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட 14 மாவட்டங்களில் 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி கூறியுள்ளார்.

- கைத்தறி துணிகளின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கில், தேசிய அளவிலான கைத்தறிக் கண்காட்சி சென்னையில் நடத்தப்படும் என்று கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு. காந்தி அறிவித்துள்ளார்.

- பொதுமக்களுக்கு மலிவு விலையில் மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்ய அனைத்து நகரங்களிலும் கூட்டுறவு மருந்தக சேவை விரிவுபடுத்தப்படும் என்று மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பெரியகருப்பன் கூறியுள்ளார்.

- கோவை, நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட 14 மாவட்டங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று மாநில உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி கூறியுள்ளார்.

பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஆறு நவீன நெல் சேமிப்பு தளங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தில் 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழமையான 9 சேமிப்பு கிடங்கு வளாகங்களில் உள்ள 53 கிடங்கு கட்டிடங்கள், புனரமைக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் பயிற்சி பெற்ற சுயஉதவி குழு உறுப்பினர்களைக் கொண்டு விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்படும் என்றும் திரு. சக்கரபாணி தெரிவித்தார்.

>>>><<<<

பொதுமக்களுக்கு மலிவு விலையில் மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்ய அனைத்து நகரங்களிலும் கூட்டுறவு மருந்தக சேவை விரிவுபடுத்தப்படும் என்று மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு அவர் பதிலளித்துப் பேசினார்.

நவீன கூட்டுறவு தொழில்நுட்பங்களை இளைஞர்களிடையே அறிமுகப்படுத்தும் வகையில், சென்னையில் கூட்டுறவு தொழில்நுட்பம் உருவாக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

கூட்டுறவு சங்கங்கள், கூட்டு வங்கிகள் மூலம் இணையவழி கடன் வழங்கும் வசதி ஏற்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

விவசாயிகள் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் பெருநகரங்களில் காய்கனி அங்காடிகள் அமைக்கப்படும் என்று திரு. பெரியகருப்பன் தெரிவித்தார்.

>>>><<<<

கைத்தறி துணிகளின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கில், தேசிய அளவிலான கைத்தறிக் கண்காட்சி சென்னையில் நடத்தப்படும் என்று கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு. காந்தி அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசுகையில், அவர் இதனை தெரிவித்தார்.

நெசவாளர்களிடையே பிற மாநில சந்தைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த 50 லட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வு பயணத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவன ஏற்றுமதியை அதிகரிக்க சர்வதேச கண்காட்சியில் பங்கேற்க ஒரு கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நீலகிரி, திண்டுக்கல் பகுதிகளில் உள்ள பழங்குடியினர் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு எம்ப்ராய்ட்ரி மற்றும் துணி அச்சிடுதல் போன்ற மதிப்பு கூட்டல் பயிற்சிகள், தேசிய வடிமைப்பு மையம் மூலம் 50 லட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும் என்றும் திரு. காந்தி கூறினார்.

>>>><<<<

நாட்டை சுயசார்பு அடையச் செய்வதில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகிக்கும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஜித்தன் ராம் மஞ்சி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

மத்திய அமைச்சகங்களில் பயிற்சி அதிகாரிகளாக பணியாற்றிய குடிமைப்பணி அதிகாரிகளுடன், மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கலந்துரையாடினார்.

மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களின் செயல்பாடுகளை, குடிமைப்பணி பயிற்சி அதிகாரிகள் முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில் இந்த பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அதன்மூலம் உயர்நிலை அதிகாரிகளுடன் கலந்துரையாடி, பல்வேறு சூழ்நிலைகளில் பணியாற்றுவது குறித்து இளம் அதிகாரிகள் கற்றுக்கொள்ள முடியும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>><<<<

புதிய குற்றவியல் சட்டங்கள், நீதி முறைக்கு முக்கியத்துவம் அளிப்பதாக மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜூன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சூழலில் சட்ட சீர்திருத்தங்கள் என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார்.

காலனி கால சட்டங்களில், தண்டனைக்கு முக்கியத்துவம் அளித்த சூழ்நிலைக்கு மாறாக, புதிய குற்றவியல் சட்டங்களில் நீதிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எந்தவொரு சட்டப்பிரச்சினைக்கும் சுமுகமான தீர்வு காண்பதே சிறந்த தீர்வு என்று திரு. அர்ஜூன்ராம் மெக்வால் குறிப்பிட்டார்.

>>>><<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று முதல் 2 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அந்த மையத்தின் இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன், கோவை மற்றும் நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று கூறினார்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் மாலை மற்றும் இரவு நேரங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, தென்தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகள், தெற்கு மற்றும் மத்திய வங்கக்கடல் பகுதிகள் அதையொட்டி ஆந்திர கடலோரப் பகுதிகள் மற்றும் கேரள – கர்நாடக கடலோரப் பகுதிகளில் இன்று முதல் நான்கு நாட்களுக்கு சூறவாளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அப்பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

இருவரிச்செய்திகள்

இலங்கையின் கொழும்புவில் நடைபெற்ற காமன்வெல்த் உள்ளாட்சி மன்ற கூட்டமைப்பின் கூட்டத்தில் இந்தியாவின் சார்பில் பஞ்சாயத்துராஜ் அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் டாக்டர் சந்திரசேகர் குமார் பங்கேற்றார்.

>>>><<<<

கம்போடியாவின் குடிமைப்பணி அதிகாரிகளுக்கான 5வது திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம் **Mussori**–யில் நேற்று தொடங்கியது.

>>>><<<<

மதுரை உலக தமிழ்ச் சங்கத்தில் முனைவர் பட்ட ஆய்வுகள் மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

ராமேஸ்வரத்தில் மீன்பிடி தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட 8 சிறார்களை, மாவட்ட குழந்தைகள் நல அலுவலர்கள் மீட்டதுடன், படகு உரிமையாளர்களுக்கு அபராதம் விதித்து மீன்பிடி அனுமதி சீட்டை ரத்து செய்தனர்.

>>>><<<<

திருப்பூர் பின்னலாடைகளை தயாரிப்பாளர்கள் ஜப்பான் ஆயத்த ஆடை சந்தைக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று ஜப்பானிலிருந்து வந்த பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

>>>><<<<

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 64ஆக அதிகரித்துள்ளது.

>>>><<<<

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாமக்கல் மற்றும் தென்காசி மாவட்டங்களில் இன்று நடைபெறவுள்ளது.

>>>><<<<

கணினித்தாள் பயன்பாடு குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி இந்திய தர நிர்ணய அமைவனத்தின் சார்பில் கரூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு காகித ஆலை மற்றும் செய்தித்தாள் நிறுவனத்தில் நடைபெற்றது.

>>>><<<<

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பொதுமக்களுக்கான வருவாய் தீர்வாயம் ஆட்சியர் திருமதி. சஜீவனா தலைமையில் நடைபெற்றது.

>>>><<<<

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாம் ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் தலைமையில் நடைபெற்றது.

>>>><<<<

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் அரசு மருத்துவமனையில் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகளை, மருத்துவர்களிடம் ஆட்சியர் திரு. பிரசாந்த் கேட்டறிந்தார்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

கயானாவில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில், இந்திய அணி 68 ரன் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.

முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 171 ரன் எடுத்தது.

கேப்டன் ரோஹித் சர்மா 57 ரன்னும், சூர்யகுமார் யாதவ் 47 ரன்னும் எடுத்தனர்.

172 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து, 16 புள்ளி நான்கு ஓவரில் 103 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்திய தரப்பில் அக்ஸர் பட்டேல், குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், பும்ரா 2 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நாளை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் இந்தியா – தென்னாபிரிக்காவை எதிர்கொள்கிறது.

>>>><<<<

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து வரும் தென்னாப்பிரிக்க அணி இந்த ஒரு டெஸ்ட் போட்டி முடிவடைந்தவுடன் மூன்று டிவென்டி டிவென்டி போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற மூன்று ஒருநாள் ஆட்டங்களிலும் இந்தியா வெற்றிபெற்றது.

**>>>><<<<**

அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் பிரியன்ஷூ ரஜாவத், மல்விகா பன்சோட் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ரஜாவத் 21-18, 21-16 என்ற செட்கணக்கில் தைவானின் **Yu Kai Huang**–ஐ வென்றார்.

மகளிர் பிரிவில் மால்விகா பன்சோட் 15-21, 21-19, 21-14 என்ற செட்கணக்கில் செக் குடியரசின் **Tereza Svabikova-**வை வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் இந்தியாவின் **Treesa Jollly – Gayathri Gopichand** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதிக்கு முந்தைய ஆட்டத்தில் அந்த இணை 16-21, 21-11, 21-19 என்ற செட்கணக்கில் தைவானின் **Pei Shan – Tzu Hung** இணையை வென்றது.

**>>>><<<<**